பொது நூலகம்
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 17 மாசி 29 ஜ- ஆகி 19 இதழ் 30
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 12-3-1985

'சோஷலிஸத் தொழிலாளரின் வீரர்' —
சோவியத்யூனியன் அதிபர் சேர்நென்கோ காலமானர்!

[மாஸ்கோ

சோவியத் அதிபர் திரு. கொன்ஸ்ன்ரின் சேர்நென்கோ நேற்று முன்தினமிரவு 7-20 மணியளவில் காலமானர், என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிதுகாலம் நோய்வாய்ப் பட்டிருந்த இவர் கடந்த பல மாதங்களாக பொது நிகழ்ச் சிகளில் கலந்து கொள்வதை தவிர்த்திருந்தார்என்பது குறிப் பிடத்தக்கது.

கடந்த ஆண்டு பெப்பிரவரி மாதம் திரு யூரி.அந்திரப்போ காலமானதைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியின் பொ துச் செயலாளராகவும் மற் றும் சோவியத் அதிபராகவும் இவர் பதவியேற்றார்.

சோவியத் யூனியனில் 13 மாதங்களுக்கு மிக உயரிய பதவியை வகித்தவரான திரு. சேர்நென்கோவின் பதவிக் காலம் இந்தப் பதவியை ஏற்றிருந்த எந்தவொரு சோவியத் தலைவரின் பதவிக் காலத்தைக் காட்டிலும் மிகக் குறுகியதாகும்.

இறக்கும்போது இவருக்கு (6-ம் பக்கம் பார்க்க)

இலங்கையில் தமிழர் நடத்தப்படும் விதம் குறித்து
மனிதஉரிமைகள் மகாநாட்டில்
அனிசேராநாடுகள் கண்டனம்!

அரசியல்தீர்வுக்கு இந்திய பிரதிநிதி வற்புறுத்து

(ஜெனிவா)

இலங்கைத் தமிழ்த்தீவிரவாதிகளுக்கெதிராக ராணுவ நடவடிக்கை என்ற பெயரில் கண்மூடித்தனமாக தமிழர்கள் கொல்லப்படுவதாகஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் கலந்துகொள்ளும் பல அணிசேராநாடுகளின் பிரதிநிதிகள் ஏதிர்ப்புத்தெரிவித்துள்ளனர். ஒருவருடத் துக்குமுன் இந்த ஆணைக்குழுவின் கூட்டம் நடைபெற்ற சமயத்திலிருந்ததை விட இப்போது நிலைமை மோசமாகவுள்ளதென்றும் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர்கள்.

வட்டமேசை மகாநாடு முடி வடைந்ததுபற்றி இந்தியப் பிரதிநிதி கவலைதெரிவித் தார். ஆஸ்திரேலிய பிரதி நிதியும் கவலைவெளியிட்டார். ஆனல் இலங்கை சார்பில் கலந்துகொண்ட பிரதிநிதி இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு தமிழ்த்தீவிரவாதி களே காரணம் என்றார்

சர்வதேச நீதிக் கமிஷன்பிரதி நிதி பேசும்போது இலங்கை யின் நிலைமை தீவிரமாகியுள்ள மைக்கு தமிழ் மக்களுக்கும், [5-ம் பக்கம் பார்க்க]

சென்னை சூட்டுச்சம்பவம்——————
இலங்கைப் பொலிஸ் விபரங்களை கோரியுள்ளது!

(கொழும்பு)

கடந்த வெள்ளிக்கிழமை சென்னையில் இரு இலங்கைத் தமிழ் தீவிரவாதப் பிரிவினரிடையே இடம்பெற்ற துப்பாக்கிச்சண்டை குறித்து இலங்கைப் பொலிஸ் திணைக்களம் தமிழ்நாட்டுப் பொலிஸாரிடம் விபரங்களைக் கோரியுள்ளது.

இத் துப்பாக்கிச்சூட்டுச் சம் (5-ம் பக்கம் பார்க்க)

யாழ். நீதிமன்றங்களில் வழக்குகள் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண நீதிமன்றங்களில் கட்சிக்காரர்களும், சாட்சிகளும் வராததினுல் பெரும் பாலான வழக்குகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

சில வழக்குகளில் நிமாண் [5 ம் பக்கம் பார்க்க]

இலங்கை அகதிகளுக்கு ——————
ஊர்வலமாகச் சென்று பொருட்கள் சேகரிப்பு

(சென்னை)

இலங்கையிலிருந்து திருச்சி வந்து தங்கியுள்ள தமிழ் அகதிகளுக்கு உதவுவதற்காக திருச்சி மாவட்ட இந்திரா காங்கிரஸ் குழுவினர் நகரின் பிரதான கடை வீதிகளில் ஊர் வலமாகச் சென்று பொருட் களையும் பணங்களையும் வசூ லித்தனர்.

இந்த ஊர்வலத்தின்போது ஒரு லட்சம் ரூபா பெறுமதி யான பொருட்களும், பத் தாயிரம் ரூபா ரொக்கப்பண மும் சேகரிக்கப்பட்டது.

இவை திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. விசுவநாத னிடம் ஒப்படைக்கப்பட்டது.

மரணப் படுக்கையில் யாழ். சுகாதார சேவைகள்!
ஊழியர்கள் கவலை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட சுகாதார திணைக்கள ஊழியர்களது தனிப்பட்ட வாகனங்களும் கண்மூடித்தனமாகக் கடத்தப் பட்டு வருவதால் நலிவடைந் திருக்கும் சுகாதார சேவைகள் மேலும் மரணப்படுக்கையில் தள்ளப்படுவதாக திணைக்கள ஊழியர்கள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மையில் யாழ் சுகாதார திணைக்களத்திற்குச் சொந்த மான வாகனங்கள் கடத்தப் பட்டதால் யாழ் மாவட் டத்தில் உள்ள ஆஸ்பத்திரி யில் ஏற்பட்டுள்ள தாக்கங் [5ம் பக்கம் பார்க்க]

ஆட்சியிலுள்ளவர்கள் ——————
தொண்டாவுக்கு எதிராக வாய்திறக்க பயப்படுகிறார்கள்!
'அஸ்கிரிய' பௌத்த தலைவர் கூறுகிறார்

(கண்டி)

"ஆட்சியிலுள்ளவர்கள் திரு. தொண்டமானுக்கு எதிராக வாய்திறக்கப் பயப்படுகிறார் கள். இதன்மூலம் அரசாங்கத் தில் அவர் எத்துணை சக்தி மிக்கவர் என்பதனை எம்மால் அறிந்து கொள்ள முடியும். ஜனுதிபதிகூட சிறுபான்மை யினரின் செல்வாக்குக் கட்டுப் பட்டுள்ளது வியப்பைத் தரு கிறது."

இவ்வாறு 'அஸ்கிரிய' பௌத்த உயர் பீடத்தலைவர் வண பரிப்பான சந்திரானந்த மஹாநாயக்கதேரோ கூறியுள் ளார்.

கடந்த வாரம் கண்டி பௌத்த சங்கக் கட்டிடத்தில் இடம்பெற்ற மதவைபவ மொன்றிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

வண மஹாநாயக்க தேரோ மேலும் கூறியதாவது: "இலங்கை இனப்பிரச்னை நன்கு ஆராயப்பட்டுத் தீர்க் கப்பட வேண்டும். வன்முறை கள் மூலம் இப்பிரச்னையைத் தீர்க்க முடியாது.

சிங்கள இனத்துக்குள்ள பிரச்னைகளை அமிர்தலிங்கத் (6 ம் பக்கம் பார்க்க)

நீர்விநியோகம் நிறுத்தம்:
ஊழியர்களுக்கு வேலையில்லை

(மட்டுவில்)

சாவகச்சேரி குடிதண்ணீர் விநியோகத் திட்ட வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஊழிய ர்களுக்கும் வேலைவிலகல் அறி விப்புக் கொடுக்கப்பட்டுள் ளது.

சில இயக்கங்கள், நீர் ப் பாசன கருவிகளையும், பொரு ட்களையும் அடிக்கடி கொள்ளை யிட்டதின் எதிரொலியாகவே இந்த திட்ட வேலைகள் ஸ்தம் பித்துள்ளன.

இதுகுறித்து ஊழியர்கள் கண்டனமும் கவலையும் தெரி வித்துள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரி
மூளை நரம்பு நிபுணருக்கு ஏற்பட்ட அனுபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி மூளை நரம்பு சத்திரசிகிச்சை நிபுணரின் காரை கடத்துவதற்கு சிலர் முயற்சி செய்ததாகவும், ஆனல் அந்நிபுணர் தாம் அறுவை சிகிச்சை ஒன்றுக்கு அவசரமாகப் போவதாகக்கூறி காரை தர மறுத்துவிட்டதாக வும் தெரியவருகிறது.

நேற்றுக்காலை அவசர சத் திரசிகிச்சைக்காக மூளை நரம் புச் சிகிச்சை நிபுணர் கலாநிதி வி குணநந்தன் வீட்டிலிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்து (5ம் பக்கம் பார்க்க)

'பூஸா' முகாமிலிருந்து மறு அறிவித்தல் வரை எவரும் விடுதலையாகார்!

[யாழ்ப்பாணம்]

பூஸா முகாமிலிருக்கும் தமிழ் இளைஞர்கள் எவரும் மறு அறிவித்தல் வரை விடுதலை செய்யப்படமாட்டார் கள் என்று தெரிவிக்கப்படு கிறது.

கடந்த 1-ம் திகதி 51 இளை ஞர்கள் பூஸா முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்டு கொழும்பு வரை வந்து சேர்ந்த போதிலும் யாழ்ப்பாணம் வருவதற்கான பாதுகாப்பு. (6ம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

விற்பனைக்கு

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினால் கல் அரித்து தயாரிக்கப்படுபவை வர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் வினியோகஸ்தர்களும்: விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு, கொக்குவில். 1909

பிரபல சைவ ஹோட்டல் ஒன்றிற்கு சமையல், இடியப்பம் தோசை, ரீமேக்கர், சப்ளை, செய்வதற்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் உடன்தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். உடன் நேரில் வரவும். அம்பலவாணர் அன் சன்ஸ். 196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2189

பழைய வீட்டின் ஒடுகள், வளைகள், தீராந்திகள் முதலியன விற்பனைக்கு உண்டு. 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2228

சிசில் பிறிஜ், ஆர்பிக்கோ hall செற், மற்றும் சில பொருட்கள் விற்பனைக்குண்டு. 9/3, ஈச்சமோட்டை, சுண்டிக்குளி. 2227

ஓட்டுமடம் ஆலடிச் சந்தியில் 10 பரப்பு வயல் காணியும் நெஷனல் டெக், 2000 சொனி T. V. 20 இஞ்சி, 88 Sri C 90 Honda மோட்டார் சைக்கிள், 1 Office Table விற்பனைக்குண்டு. நியூ குகானந்த கபே, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். 2214

யாழ். மாநகர சபை எல்லைக்குள் மானிப்பாய் வீதியில் மின்இணைப்புடன் கூடிய வீடு: கிணறு, மலகூட வசதிகளையும் உள்ளடக்கிய ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: தம்பு நாகராசா, 9/3, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். 2217

வாடகைக்கு

யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். வளாகம் ஆகிய வற்றுக்குச் சமீபத்தில் கராச் உட்பட்ட சகல வசதிகளுடன் கூடிய மூன்று அறைகளைக் கொண்ட வீடு உடனடியாக வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு:-19/2பிரவுண் வீதி, 2-ம் ஒழுங்கை, கந்தர்மடம். 2210

யாழ். மாநகரசபை எல்லைக்குள் இல: 573 மானிப்பாய் வீதியில் ஒரு வீடும், கொக்குவில் மேற்கில் சி. எம். எஸ். ஒழுங்கையில் ஒரு மேல்மாடி வீடும் வாடகைக்குண்டு. தொடர்பு:- 573, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2213

கலர் பீலிம் சுருள்கள்
PROCESSING & PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

11ம் நாள் நினைவஞ்சலி

தாமோதர ஐயர் பார்த்தீபன்

தாயின் மடியில்: 5-12-1983
இறைவனடியில்: 2-3-1985

பிஞ்சுப் பருவத்தில் மழலைச் சொற்களால் எம்மை வசீகரித்து மாயக் கிருஷ்ணன் போல் துள்ளித் துள்ளி விளையாடி, ஆருத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு இப் பிரபஞ்சம் உனக்கு உதவாது என்று இறைவனடி சேர்ந்தாயோ!

தாய், தந்தை, அக்கா, பாட்டி.

26, பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம். (2223)

முதல் ஆண்டு நிறைவு

நினைவு அஞ்சலி

செல்வன் கனகலிங்கம் லிங்கதேவன்

மலர்வு: 30-07-1967
மறைவு: 22-02-1984

மாதங்கள் ஓடி மறையலாம்
மேகங்கள் கூடிக் குலையலாம்
வேதங்கள் ஓதி உணர்த்தலாம்!
எம் தேகங்கள் அழியுமட்டும்
உன் நினைவுச் சோகத்தை
மாற்ற மருந்தில்லை தேவா!

உமது பிரிவால் வாடும்

தந்தை, தாய், சகோதரர்கள், உறவினர்கள்.

126, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம். 2211

59 வது நாள்

நினைவு அஞ்சலி

கந்தையா அருமைச்செல்வம்
(செல்வம்)



தோற்றம்: 26-11-1956

★ ● ★

அழிப்பு: 09-01-1985

நெஞ்சு துளைக்கப்பட்டு ஓடியதோ குருதிவெள்ளம். தஞ்சமென்றிருப்போர் வாடியது கருதிலையோ. வஞ்சகன் அந்தகன் அகால வேளையிலே வந்தனனே இன்னுயிர் பறித்திடவே. இல்லை இல்லை விசுவாசிகளுக்கு வாழ்வு மாறுவதே தவிர அழிவதில்லை. மரணம் ஆத்மாவைக் கொல்வதில்லை.

தாய், தந்தை, சகோதரிகள், சகோதரர், உறவினர்.

சர்வோதயா வீதி,
ஆவரங்கால், புத்தூர். 2224

மரண அறிவித்தல்

லில்லிபூரணம் ஜெபரட்ணம்

இவர் காலஞ்சென்ற எம். ஆர். எம். ஜெபரட்ணத்தின் அன்பு மனைவியும், செல்வியின் அருமைத் தாயாரும் Gordonனின் அருமை மாமியாரும், சுகேன், நிர்மலா, ரவின், தர்சினி ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், மஞ்சுவின் பூட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லமாகிய ஆனைக்கோட்டை 'பூரணகிரி'யில் இருந்து மானிப்பாய் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்கு இன்று (12-3-85) செவ்வாய்க்கிழமை மாலை 3-30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், ஏற்றுக்கொள்ளவும். 2212

சேவை

உங்கள் குளிர்சாதனப் பெட்டிகள் (Refrigerators, Freezers, Air - Conditioners etc) பழுதடைந்து விட்டனவா? கவலை வேண்டாம். உடனே எங்களுடன் தொடர்பு கொள்ளவும். இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற பொறியியலாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் சகல திருத்தல் வேலைகளும் உங்கள் இடங்களிலோ அல்லது எங்கள் வேலைத்தளத்திலோ உங்கள் வசதிக் கேற்றவாறு காலதாமதமின்றியும், உத்தரவாதத்துடனும் செய்து கொடுக்கப்படும் குளிர்சாதனப் பெட்டிகளின் ஸ்பிரே பெயின்ரிங் வேலைகளும் உங்கள் இடங்களிலேயே வைத்து செய்து கொடுக்கப்படும்.

REFRIGERATION ENGINEERING SERVICES

37/6, ஸ்ரான்லி வீதி, கலட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். வட்டு மேற்கு,
2222 வட்டுக்கோட்டை.

நன்றி நவிலல்

சொர்ணம் செல்லையா

சொர்ணம் செல்லையா அவர்களின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டு, உதவிகள்புரிந்தவர்களுக்கும், துயரச்செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும் அவர்களின் குடும்பத்தராகிய நாம் நன்றி கூறுகிறோம். தனித்தனியாக நன்றி கூறுவதற்கு இயலாமைக்கு வருந்துகிறோம். 2219

"கடற்கோட்டை"

செங்கை ஆழியான் — சரித்திர நாவல்

ஈழநாடு பிரசுரம்

விலை ரூபா 20-00

வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்

பிரதிகள் தேவையானோர் எம்முடன் தொடர்பு கொள்க:

பொதுமுகாமையாளர்,
ஈழநாடு லிமிட்டெட் — யாழ்ப்பாணம்
போன்: 22389, 24126

2220

Eurolanka Travels And Tours Ltd.

40, THIRD CROSS STREET, JAFFNA.

தற்போது பேர்லினுக்கு பாங்கொக் (BANGKOK) ஊடாக MOSCOW மூலம் எமக்கு விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட AEROFLOT சேவையில் 25-3-85 தொடக்கம் ஒவ்வொரு திங்களும் பிரயாணம் செய்வதற்கு டிக்கட்டுகள் எமது காரியாலயத்தில் பதிவு செய்யப்படும். மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள் இருப்பதால் உடன் தொடர்புகொள்ளவும்.

கட்டணம்: ரூபா 15,000/-

எமது பிரதிநிதி ஒருவர் கொழும்பிலிருந்து பாங்கொக் வரை இக்குழுவினருடன் சென்று பேர்லின் செல்லும் AEROFLOT விமானத்தில் பயணம் அனுப்புவார்.

(I) பாங்கொக்கில் தங்குமிடம், உணவு - Three Star Hotel இலவசம்.

(II) பிரயாணக் காசோலைகள் (Travellers Cheques) எடுத்துக் கொடுப்பதற்கான இலவச சேவை.

(III) கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு போக்குவரத்துச் சேவை.

(Iv) மற்றும் எல்லா நாடுகளுக்கும டிக்கட்டுகளும், விமானப் பதிவுகளும் (Confirmotion) செய்து கொடுக்கப்படும்

தலைமை அலுவலகம்:

EUROLANKA TRAVELS AND TOURS LTD.,
6A, DAISY VILLA AVENUE, COLOMBO - 4.
Telephone: 585990, 589992

(2226)

மணிவாக்கு

கண்களை இழந்தவன் குருடனல்ல. எவன் தன்னிடமுள்ள குறைகளை மறைக்கிறானோ அவனே குருடன்.

—மகாத்மா காந்தி

நமது நோக்கு

உலக சாம்பியன்! உண்மைதானா?

தங்கள் கருத்துக்களை ஒரு நாளும் மாற்றிக் கொள்ளாதவர் இருவர். அதில் ஒருவர் மூடர் அடுத்தவர் இறந்தவர் என்பது ஒரு அமெரிக்க அறிஞர் வெளியிட்ட கருத்து.

இந்த அடிப்படையில் எங்கள் நாட்டின் ஆட்சிக்குப் பொறுப்பான தலைவர்கள் எவரும் மூடரென்று கொள்ள இடமில்லை.

நாட்டின் இன்றைய நிலைமையில் அரசியல் மடமை நாட்டை எங்கு கொண்டு போகுமென்று நினைக்கவே மனம் இடங்கொடாது.

ஆனால் கருத்து மாற்றத்துக்கு, ஆண்டவனே என்று இங்கு பஞ்சமெதுவுமில்லை.

குறிப்பாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வா அல்லது இராணுவத்தீர்வா எது முந்தியது? என்பது உதாரணம்.

'பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தால் ஒழிக்க முடியாது' என்று பலகாலம் சொல்லப்பட்டது. ஆனால் இவ்விடயத்தில் கருத்துமாற்றம், அடிக்கொருகதை இருப்பதை சிந்தனைத்திறன் என்று கருதலாமா?

திருமணமாகி ஐம்பது ஆண்டுகளையும்; அரசியலில் 45 வருட அனுபவத்தையும் உடைய ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் பயங்கரவாதத்தை ஒழித்தாலே அரசியல் தீர்வை ஆராயலாமென இன்று கருதுகிறார்.

நாட்டியக் கலையை நன்றாகப் பயின்ற ஒரு பெண் ஆடும்பொழுது தவறுதலாக அடி எடுத்து வைக்கமாட்டாள்; அரசியற்கலையும் ஓரளவிற்கு அது போன்றதே!

பாதுகாப்பு அமைச்சர் லலித் எடுத்துவைக்கும் தவறான அடிகள் பல; அவர் அரசியல் கலைக்கு புதிதென்பது அதன் விளக்கம்.

ஆனால் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் அரசியல் சதுரங்கத்தில் பயிற்சிபெறும் லலித் இவ்வளவு மோசமான முரண்பாடுகளுக்குள்ளாவதற்கு தம்முடைய குருவே பொறுப்பென நினைக்கலாம்.

பயங்கரவாதம் தணிய காலநிலையில் சிங்கள மக்கள் அரசியல் தீர்வில் நம்பிக்கை கொள்ளமாட்டார்கள்.

அதற்கு மருந்து டில்லியில் தான் உண்டென்பது இன்று பலர் ஒத்துக்கொண்ட கருத்து.

இந்தியாவின் தலையீட்டை பெரும்பான்மையான சிங்கள மக்கள் விரும்புவதில்லை; அதேசமயம் இந்தியா எந்நேரமும் இலங்கையைத் தாக்குமோ என்ற அச்சம் சிங்கள கிராம மக்கள் மத்தியில் பரவி இருக்கிறது. பார்த்தசாரதி வேண்டாமென்பது அதன் பிரதிபலிப்பு

கருத்துமாற்றத்தின் அவசியம் புலப்படுகிறதல்லவா?

2500 வருடபுராதனமான பௌத்த சிங்கள கலாசாரத்தைப் பேணுவதில் சுமார் 18 வருடங்களுக்கு முன் தம்மை அர்ப்பணித்த ஜனாதிபதிக்கு இன்றைய நிலைமை உண்மையில் சிக்கல் நிறைந்தது.

முடிச்சுமாறிகள் அரசியல் துறையிலும் உண்டு; பொறுப்பற்ற விதத்தில், தருணத்துக்குத் தக்கமாதிரி செயலாற்றிபெரும்பதவிக்கு உயருவதுமுண்டு; ஆனால் இத்தகைய சோதனையில் அவர்கள் நிச்சயம் கையும் மெய்யுமாக இனங்காணப்படுவார்கள்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா எவ்விதத்திலும் இதற்கொரு நியாயமான முடிவுகாண்பாரென்ற நம்பிக்கை இன்றும் உண்டு.

இன்று அவர் அஹிம்சை வழியை நாடி இருப்பதை நாம் ஆழமான கருத்தாகக் கொள்ளலாம்.

அஹிம்சை என்பது இந்தியா. இந்தியா என்பது அஹிம்சை. இந்தியாவில்லாத அரசியல் தீர்வு நிரந்தர தீர்வாகாது; இந்தியாவில்லாது பயங்கரவாத ஒழிப்புவீண்வாதப்பெருக்கு.

நட்பை நடிப்பாலும் வெல்லலாம்; பகைவன் என்று நடித்துப் நட்பை பெறலாம்.

இந்தரகசியத்தை நன்கு உணர்ந்த சாதனங்கள் அரசு சார்புடைய கொழும்பு தினசரிகள்; அவற்றின் தலை[illegible]ரும் புரியமுடியாது.

இந்தியாவுடன் பத்திரிகைப்போர் தொடுத்தல் இந்த நாடகத்தில் ஒருமுக்கிய அம்சம்.

"இந்தியமாநில தேர்தலில் ராஜீவுக்கு [illegible] என்றொரு தலையங்கம்". 22 மாநிலதேர்தல்களில் சுமார் 40 பேர் கொலை! இது இன்னுமொரு கேலிசித்திரம்.

பத்திரிகைப்போர் அமெரிக்காவிலேயே இச்சதியை சாதனையை நிகழ்த்தியிருக்கிறது. 1948ல் ஜனாதிபதி ருறூமன் வெற்றியீட்டிய போது, ஒருபிரபல பத்திரிகை தவறுதலாக அவருடன் போட்டியிட்ட திரு டீவி (Dewey) வெற்றியிட்டினை என்று வெளுத்துவிட்டது. அப்[illegible]கையில் வைத்துக்கொண்டு உங்கள் ஜனாதிபதியை நேரில்- இப்பத்திரிகையில் அல்ல- காண்கிறீர்களென்று மிகஅமைதியாக, ஒரு மாபெரும் கூட்டத்தில் ருறூமன் சொன்னது நினைவுக்குவருகிறது.

பாசாங்கு போன்ற எங்கள் இன்றைய பத்திரிகைப்போருக்கு, இந்தியா கிரிக்கெட்டில் சாம்பியனானது ஒரு பெரும் சவால். "உண்மைதானா?" என்ற கேள்வியும் செய்தியில் இடம்பெறலாம்.

தமிழ்நாட்டுடனும் டில்லியுடனும் நட்புக்கொள்வதைப்போல நேர்மைக்கு உதாரணமான கிரிக்கெட்டில் இந்தியா கூட்டிய சாதனை நினைவுறுத்துகின்றது

பாராளுமன்றத்தில்——பெஞ்சமின் இராசரத்தினம்

சரத் கிளப்பிய தமிழர்பிரச்னை!

தேசிய நிதியச் சட்ட மூலத்தின் வாசிப்பு மீதான விவாதம் கடந்த ஐந்தாம்திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. சபையில் அன்று குறைந்தஅங்கத்தவர்களே சமூகமளித்திருந்தனர்.

விவாதத்தை தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி ஆரம்பித்து வைத்துப் பேசினார். தேசிய பாதுகாப்புநிதியை ஆரம்பித்து வைப்பதற்கான காரணங்கள், அத்துடன் இப்போதுள்ள பிரச்னையை எப்படித் தீர்க்கலாம் என்பனவற்றை அமைச்சர்கூறினார். நாம் அரசியல் தீர்வு ஒன்றையே விரும்புகிறோம். ஆனால் பயங்கரவாதிகள் பயங்கரவாதத் தீர்வையே விரும்புகிறார்கள் எனவும், வன்னிப் பிரதேசத்தில் சகல இன மக்களையும் குடியமர்த்துவதன் மூலம் இந்தப் பிரச்னையை நீண்டகால அடிப்படையில் தீர்த்துவைக்கலாம் எனவும் அவர் கூறினார்.

கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காபேசுகையில், ஆசிரியர்களிடமிருந்து இந்த நிதிக்கு பலவந்தமாக பணம் அறவிடப்படமாட்டாதென்றும், நிதிக்கு பணம் வழங்க விரும்புவோர் சுயவிருப்பத்தின் பேரிலேயே வழங்கலாம் எனவும் தெரிவித்தார்.

தமிழர்களை அழிக்கலாமா?

கலவானைத்தொகுதி எம்.பி. யும் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவருமான திரு. சரத் முத்தேட்டுவகம இந்த நிதிக்குத் தமது கட்சி எதிர்ப்பைத் தெரிவிப்பதாகக் கூறினார். இந்த நிதியைக்கொண்டு தமிழ் மக்கள் அனைவரையும் அழித்துவிடப்போகிறீர்களா? அல்லது இந்தியாவுடன் யுத்தம் செய்ய முயற்சி செய்கிறீர்களா எனவும் அவர் கேள்வி எழுப்பினார். 'இந்தியா டுடே' பத்திரிகையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அளித்திருந்த பேட்டி பற்றியும் அவர் குறிப்பிடத்தவறவில்லை. இலங்கையில் நடைபெறும் சம்பவங்கள் பயங்கரமானவையாக இருக்கின்றன என்று ராஜீவ் கூறியதை அவர் சபையில் கூறினார்.

முஜிபுர் றஹ்மானைப்போல் ஒரு தலைவர் வடக்கு,கிழக்கில் இல்லாமல் போனதும், இந்தியாவில் உள்நாட்டுப் பிரச்னைகள் இருப்பதுவும் நாம் செய்த பாக்கியங்களாகும் என்று சுகசமா சரத் சபையில் கூறினார்

வேதாரணியம்

லலித் இரண்டாவது வாசிப்புமீதான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசியபோது ஒரு கட்டத்தில், பயங்கரவாதிகள் வேதாரணியம் என்ற இடத்தில் இருப்பதாகவும் அந்தத் தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர் ஒருவரே அங்கு இருக்கிறார் எனவும் குறிப்பிட்டார்.

இதைக் கேட்ட சரத், ஒரு பகுதியில் நடக்கும் சம்பவங்களுக்கெல்லாம் ஒரு எம். பி. பொறுப்பாகஇருக்கமுடியாது. இரத்மலானையில் நடப்பவை எல்லாவற்றுக்குமே அந்தத் தொகுதியின் எம். பி. யாக நீங்கள் பொறுப்பாக இருக்க முடியுமா? ராணுவத் தலையீடு வேண்டும் என்பதுபற்றி லோகசபையில் ஆலோசனை வந்தபோது அதற்கு எதிராக இருந்ததே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தான் என்று பதிலளித்தார்.

சுந்தரருக்கு பாராட்டு

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவும் திரு. சுந்தரலிங்கத்தைப் பாராட்டத்தவறவில்லை. திரு.சுந்தரலிங்கம் இலங்கை ஈன்றெடுத்த ஒரு உன்னதப் புதல்வரென்றும் அவர் தன்னுடைய கல்வி அறிவின்மூலமாகவும் சேவை மூலமாகவும் நாட்டுக்குப் புகழையும் பெருமையையும் தேடித்தந்திருக்கிறார். அரசியல்துறையில் ராஜினமா என்ற முறையை அறிமுகப்படுத்தியவரே அவர்தான், இலங்கையிலுள்ள சகல இன மக்களும் அவரைப்பற்றி பெருமைப்படலாமென்று மறைந்த தமிழ்மகனைப் பாராட்டினார்.

மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தல்களை உரிய காலத்தில் நடாத்தாததற்குக் காரணங்கள் என்ன என்பதை பிரதமர் திரு ஆர்.பிரேமதாசா கடந்த 7ம் திகதி சபையில் கிளப்பினார். அத்துடன் அதிகார பரவலாக்குதல் சம்பந்தமாக அமைச்சரவை உபகுழு அதன் சட்டவரைவுகளை சமர்ப்பித்ததும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அது நாடாளுமன்றத்தின் அங்கிகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்தவுடனேயே மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்றுஉறுதியளித்தார்

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களை ஒத்திவைப்பது தொடர்பாக பிரதமர் சபையில் சமர்ப்பித்த அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

கலவானைத் தொகுதி எம். பி. திரு.சரத்முத்தேட்டுவேகம பேசியபோது கூறியதாவது:-

எல்லா இடங்களிலும் வங்கிகளை ஆரம்பித்து மக்களுக்குப் பணம் கொடுக்க ஆரம்பித்தால் என்னநடக்கும்? இது முதலாளித்துவநிலை. சுயவேலை வாய்ப்புத்திட்டத்தில் இன்றைய இளைஞர்களுக்கு அக்கறையில்லை. எல்லோரும் வேறு ஸ்தாபனங்களில் தொழில் எடுப்பதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர் கிராம அபிவிருத்தி என்பது எத்தனையோ அம்சங்களை உள்ளடக்கியிருக்கிறது.

மக்கள்வங்கிகள் இன்று ஆபத்தான நிலையிலிருக்கின்றன. மக்கள்வங்கிகள் அல்ல அதுசிலரது வங்கி. இவ்வங்கியில் அரசியல் அடிப்படையில் கடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் அரசியல் அடிப்படையில் பணம் அவர்களிடமிருந்து திருப்பி எடுக்கப்படவுமில்லை.

வங்கி எழுதுவினைஞர் எடுப்பதற்கான பரீட்சை நடத்தப்பட்டது. இரண்டு அல்லது மூன்று லட்சம் இளைஞர்கள் அந்தப்பரீட்சைக்குத் தோற்றினர். ஆனால் அந்தப்பரீட்சைக்கு என்ன நடந்தது? சில

(5ம் பக்கம் பார்க்க)

தவக்காலத்தின்

21-ம் நாள்

'ஒருகன்னத்தில் அறைபவனுக்கு மறுகன்னத்தையும் காட்டு. உன் மேலாடையைப் பறிப்பவனுக்குஉள்ளாடையையும் மறுக்காதே. பிறர் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகின்றீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (லூக்.6; 29,39)

எத்தனை மனிதர்களும் உலகத்திலே வாழ்ந்தாலும் அத்தனை மனிதர்களிலும் உத்தமன் நானே என வாழ்த்துப் பெறவே நான் விரும்புகிறேன். நான் நல்லவன், நாணயமானவன் என்று பலரும் என்னைப் போற்ற வேண்டும். பேரும் புகழும் பெற்று வாழவேண்டும் என்று விரும்புகிறேன். ஆயினும் நடைமுறை வாழ்க்கையில் அதற்குச் சற்றேனும் அருகதை அற்றவனாக வாழ்ந்து வருகிறேன்.

"இன்னுஞ் செய்தார்க்கும் நன்னயம் செய்து நாணிடச் செயல்" என்றார் திருவள்ளுவர். ஆனால் நானோ, என்னை அடித்தவனின் வாழ்க்கையை முடித்தே விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன் எனப் பழிவாங்குவதற்காக பாய்ந்து செல்கிறேன். என் நற்பெயரைக் கெடுத்தவனின் உயிரைக் குடித்தே வேன் எனப் பிரதிக்கினை பண்ணுகிறேன். எனது செயற்பாட்டில் திருப்பம் வேண்டும். மற்றவனின் வளர்ச்சியிலும், மலர்ச்சியிலும் நான் மகிழ்ச்சியடைய வேண்டும்.

வண. பின்சென்ற் பற்றிக் அ. ம. தி.

சீனவெடி ஏற்படுத்திய பரபரப்பு

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டைப் பகுதியில் திடீரென இரவுவேளையில் தொடர்ச்சியாக வெடிச்சத்தங்கள் கேட்டதால் பொதுமக்கள் மிகுந்த அச்சத்துக்குள்ளானார்கள்.

கடந்த சனிக்கிழமை இரவு. வட்டுகிழக்குபகுதியில் யாரோ விஷமிகள் சீனவெடிக்கோர்வைகளைக் கொளுத்திப்போட்டதாகவும், இப்பகுதி பொதுமக்கள் ஏதோ என்னவோ என்று பயந்து வெளிச்சங்களை அணைத்தும், லைட்டுகளை நிறுத்தியும் அவதிப்பட்டதாகவும், வீடுகளில் ரீ.வீ.படக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தவர்களும் பாதுகாப்புத்தேடி ஓடியதாகவும் கூறப்படுகிறது.

கூட்டுறவுப் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுப் பரிசோதகர் (தரம் II - பிரிவு - ஆ) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப்பதவிக்கான அறிவித்தல் 22-2-85 வர்த்தமானியில் வெளியாகியுள்ளது.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. (உயர்தரம்) இரு அமர்வுகளில் 4 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் 40 வயதிற்குட்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்திலுள்ள உதவி கூட்டுறவு ஆணையாளர் காரியாலயத்திற்கு சொற்ப தொகையான விண்ணப்பப் பத்திரங்கள் வந்திருப்பதாகவும், அடையாள அட்டை, கல்வித் தகைமைகளைத் தெரிவித்துவிண்ணப்பப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. [க]

2,500 மக்கள் பலி

உச்சக்கட்டத்தில் ஈரான் - ஈராக் யுத்தம்!

தெஹ்ரான், மார்ச், 11

ஈரான் – ஈராக் யுத்தம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பெருமளவு ஆட் சேதமும் ஏற்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை முதல் அதிகரித்து வரும் இந்தயுத்தத்தில் 2,500 பொதுமக்கள் பலியானதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஈராக்கியப் போர் விமானங்களும், ஏவுகணைகளும் ஈரானின் பல நகரங்களைத் தாக்கியதாகவும், அதில் 130 பேர் பலியானதாகவும் ஈரானிய செய்தி ஏஜன்சியொன்று தெரிவித்துள்ளது.

சிவிலியன் பகுதிகளில் நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்துமாறு ஐ.நா. வின் பொதுச் செயலாளர் திரு. பிரெஸ்டி கொய்லர் ஈரான், ஈராக் ஆகிய இரு நாடுகளையும் கேட்டுள்ளார்

யுத்தத்திலிருந்து சிவிலியன் பிரதேசங்களை விலக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

இவரின் கோரிக்கைக்கு இவ்விரு நாடுகளும் செவிசாய்க்காது சிவிலியன்கள் மீதான தாக்குதல்களை அதிகரித்துவருகின்றன.

கடந்த இரண்டு நாட்களில் மட்டும் பன்னிரண்டு ஈராக்கிய நகரங்கள் மீதும், எல்லைப் பட்டினங்கள் மீதும் தாக்குதல்களை நடத்தியதாக ஈரான் அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களில் ஈராக் வடக்கு ஈரானில் விமானங்கள் தாக்குதல் தொடுத்ததை ஈராக் ஊர்ஜிதம் செய்துள்ளது.

16 ஆண்டுகள் இடைவெளிக்குப்பின்னர்

புதுச்சேரியில் இந். காங்கிரஸ் அமைச்சரவை

புதுடில்லி, மார்ச், 11

பதினாறு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் இந்திரா காங்கிரஸ் அமைச்சரவைபுதுச்சேரியில் அமையவுள்ளது.

அமைச்சரவை அமைப்பது தொடர்பாக ஆலோசனைநடத்துவதற்காக புதுச்சேரி முதலமைச்சர் ஜனப் எம். ஓ. எச். பாரூக் மரைக்காயர் புதுடில்லி சென்றுள்ளார்.

30 உறுப்பினர்களைக் கொண்ட புதுச்சேரி சட்டசபையில் 21 இடங்களை இந்திரா காங்கிரஸ், அ.தி.மு.க. கூட்டணி பெற்றது தெரிந்ததே.

றெட்பானு, போரூட், சர்வோதயம்

மாதகல் பண்டத்தரிப்பு மக்களுக்கு உதவி

[பண்டத்தரிப்பு]

கடல்கண்காணிப்பு வலயத்திட்டத்தினால் தொழில்செய்ய முடியாத நிலையில்பட்டினியால் வாடும் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த மாதகல், பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவ குடும்பங்களுக்கு றெட்பானு, போரூட் சர்வோதயம் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து அன்பளிப்புச் செய்த உணவுப்பொருட்கள் இரு தினங்களாக வழங்கப்பட்டன.

பண்டத்தரிப்புக் கிராம சேவை அலுவலர் திரு எஸ். சுந்தரமூர்த்தியின் மேற்பார்வையில் மாதகல் புனித தோமையப்பர் ஆலய முன்றலில் வைத்து மாதகல் கிராமத்தைச் சேர்ந்த 323 மீனவக் குடும்பங்களுக்கு அரிசி, மைசூர் பருப்பு, ரின்மீன், பால்மா ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று பண்டத்தரிப்பு கிராம சேவை அலுவலர் பிரிவிலுள்ள 191 மீனவக் குடும்பங்களுக்கு பண்டத்தரிப்பு கிராம சேவை அலுவலர் திரு. சுந்தரமூர்த்தியின் அலுவலகத்தில் வைத்து மேற்படி உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்த அன்பளிப்பு வைபவத்தில் போரூட் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ராஜி ஹேக்கினேஸ், திரு இன்ஜே குரூஸ் லான்ட் ஆகியோரும் மற்றும் றெட்பானு, சர்வோதய நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்

இவர்கள் கடல்கண்காணிப்பு வலயத்தினுல் பாதிக்கப்பட்ட மீனவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கஷ்டங்களையும் நேரடியாக கேட்டறிந்தனர்.

மனநோயாளர் கஷ்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் மனநோயாளர், உரிய மருந்துவகைகள் இல்லாமையால் மிகவும் கஷ்டப்படுவதாக ஆஸ்பத்திரிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வவனியாவிலிருந்து மருந்து வகைகள் எடுத்துவருவதற்காகச் சென்றலொறி கடத்திச் செல்லப்பட்டதால், அத்தியாவசியமான மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், அவற்றுள் மனநோயாளருக்கு வழங்கப்படும் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதாரத் திணைக்களத்தில் கடைசியாக நின்றவாகனம் குறிப்பிட்ட லொறிதான் என்றும் அவ்வாகனம் கிடைக்கும் வரையோ அல்லது வேறு வாகன வசதிகள் கிடைக்கும் வரையோ மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவும் என்றும் யாழ். சுகாதரத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் சொன்னார். (மா)

நெஞ்சில் நிறைந்தவர்

சிறிய வயது தான், ஆனல் பரந்த அறிவு. சிரித்த முகம், சிந்தனையைத் தூண்டிவிடும் கண்கள், பார்ப்பவர் எவரையும் வசீகரிக்கும் பார்வை, எவர்க்கும், எப்பொழுதும், எவ்வகையிலும் உதவுகின்ற உளப்பாங்கு இத்தனையும் கொண்ட கைதடி ச. தியாகராசாவின் சடுதி மறைவு எமக்கெல்லாம் பேரிழப்பாகும்.

''சின்னு'' .....என்று உறவினர்களாலும், ''தியாகு'' என்று நண்பர்களாலும்அழைக்கப்பட்டுவந்த ''தியாகராசா'' இன்று எம்மிடையே இல்லாவிட்டாலும் அவர் செய்த சேவைகள், தியாகங்கள் எல்லாம் எம்முன்னே வாழ்ந்து கொண்டுதான் இருக்கும்.

சிறிய வயதில் வியாபாரத்தில் ஈடுபடத் தொடங்கிய 'தியாகு' யாழ்ப்பாணத்தில் வர்த்தக ஸ்தாபனமொன்றில் விற்பனையாளராகக் கடமையாற்றி வியாபாரத்திலுள்ள நெளிவு சுழிவுகளைக் கற்றுக் கொண்டார். குறுகிய காலம் தான் இத்துறைக்குள் நுழைந்தார். அதற்குள்ளே பலவற்றையும் அறிந்து கொண்டார்.

அவர் உயிருடன் இருந்தால் பெரிய ஒரு நிறுவனத்தின் தொழில் அதிபராக வரக்கூடிய சான்றுகள் இருந்தன, ஆனல் இறைவனே, தன்னுடன் இரண்டறக் கலக்கச் செய்து விட்டார். அன்னரின் ஆத்மா சாந்தியடைவதாக!

–வனிதா

பின்னர் புகையிரதநிலைய அதிபர் சேவையிற் சேர்ந்து காங்கேசன்துறைப் புகையிரத நிலைய அதிபராகவிருந்து இளைப்பாறினர். அன்னர் குடும்பப் பொறுப்பைச் சிரமேற் கொண்டு நடந்தமை அவரது சகோதரங்களும், பிள்ளைகளும் பொறுப்புவாய்ந்த பதவிகளை வகித்து வருவது அவரின் நேர்மைத் திறனுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

வ. தங்கராசா

'ஈழநாடு' நிறுவனமும் யாழ். இலக்கிய வட்டமும் இணைந்து நடத்திய இலக்கிய அரங்குக் காட்சிகள்: இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டியில் பரிசுபெற்ற து. வைத்திலிங்கம், திருமதி கனக செந்திநாதனிடம் பரிசுபெறுவதையும் நடுவில் எழுத்தாளர் செங்கை ஆழியான் நிற்பதையும் முதற்படத்திலும் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களை மற்றைய படத்திலும் காணலாம். (படங்கள்: தேவா)

பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு:

நாவலர் மண்டபத்துக்கு மாற்றும்படி வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவை யாழ். 'நாவலர் கலாச்சார நிலைய' கட்டிடத்துக்கு இடமாற்றும்படி யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருக்கு ஆலோசனை ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனையை உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு. சி. த. மார்க் கண்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கடிதமொன்றையும் துணைவேந்தருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மருதனுமடம் இராமநாதன் கல்லூரி வளவில் அமைந்த யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவை யாழ். நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாச்சார நிலையக்கட்டிடத்துக்கு இடமாற்றும்படி ஆலோசனை கூறுகிறேன்.

''ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்' ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டுள்ள இக்கலாச்சார நிலையம் பாவிக்கப்படாமல் பூட்டி வைக்கப்பட்டுள்ளது. இதற்கென நாவலர் சபை ஒன்றிருப்பதாகவும், ஆனல் அது இயங்காமல் இருப்பதாகவும் பேசப்படுகிறது.

எனவே மருதனுமடத்திலுள்ள யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவை இக்கட்டிடத்துக்கு இடம்மாற்றவும்.''

இந்த ஆலோசனையை பல்கலைக்கழகக் கவுன்சில், சென்ட் சஆகியனவற்றுக்கும் மார்ப்பிக்கவேண்டுகிறேன். (கி)

செயலகத்தில் ஓய்வூதியம் பெறுபவர்கட்கு!

[யாழ்ப்பாணம்)

யாழ். அரச செயலகத்தில் இயங்கும் இலங்கை வங்கிக் கிளையில் ஓய்வூதியம் பெறுபவர் கட்கான பெப்ரவரி மாத ஓய்வூதியம் காசோலைமூலம் செயலகத்தில் வழங்கப்படுமென அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

குடிசார் (சிவில்) ஓய்வூதியப் பட்டியலில் அறிவித்துள்ளபடி முதல் 100 பக்கங்களில் வரும் ஓய்வூதியக்காரருக்கு இம்மாதம் 12-ம் திகதியும், 101-ம் பக்கத்திலிருந்து ஏனைய பக்கங்கள் வரையுள்ள ஓய்வூதியக்காரர்களுக்கு 13-ம் திகதியும், விதவைகள் மற்றும், அநாதைப் பணம் பெறுபவர்களுக்கு 14-ம் திகதியும் ஏனைய ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 15-ம் திகதியும், மலாயன், சிங்கப்பூர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 18-ம திகதியும் ஓய்வூதியம் வழங்கப்படும்.

கடமையே அவர் உடமை

வடமாகாணத்திலுள்ள தமிழ்மக்களின் குறிப்பாக, வலிகாமம் - வடக்கு மக்களின் நன்மதிப்பையும், அபிமானத்தையும் பெற்று வாழ்ந்த அமரர் எஸ். வி. பொன்னுத்துரை அமரவாழ்வு பெற்று மூன்று வருடங்கள் ஆகின்றன. அவரின் நாமம் மக்கள் நெஞ்சிலே நிலைத்துக்கொண்டே இருக்கின்றது. தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டு அவ்வூர் அமெரிக்க மிஷன் பாடசாலையில் லண்டன் மற்றிக்குலேசன் வரை படித்து முதலில் திருகோணமலை விமானத் தளம் அமைப்பு வேலையில் சேர்ந்து அவ்வேலைபூர்த்தியானதும், வெள்ளையர்கள் அவரது வேலைத் திறன், கடமை, நேர்மை ஒழுக்கத்தைதும் மனதில் கொண்டு பலாலி விமான நிலைய அமைப்பு வேலையில் இலங்கையர்களில் முதல் பொறுப்பதிகாரியாக அமர்த்தினர். அக்காலத்தில் கழக்காசிய நாடுகளில் பலாலி விமானத்தளமே பெரிதாக இருந்தமையால் அதில் வேலை செய்வதற்கு ஆறுயிரம் தொழிலாளர்கள் வேலைக்குத்தேவைப்பட்டது. அமரர் பொன்னுத்துரையின் நேர்மையையும், கண்ணியத்தையும் அறிந்த ஆங்கிலேயர் வேலைக்கு ஆட்கள் சேர்க்கும் பொறுப்பையும் அவரிடமே ஒப்படைத்தனர். நேர்மை, நீதி, நியாயம், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டிற்கு அடிபணிந்த அமரர் பொன்னுத்துரை ஆங்கிலேயர்களும். தொழிலாளர்களும் பாராட்டக்கூடிய முறையில் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியதுடன் தன் கடமையையும் செவ்வனே புரிந்தார்.

பலாலி வேலை முடிந்ததும் வெள்ளையர்கள் அவரைக் கட்டுநாயக்காவிற்கு அழைத்துச் சென்று அங்கும் பொறுப்பதிகாரியாக அமர்த்தினர். இறுதியில் ஆங்கிலேயர் அவரை இங்கிலாந்திற்கு வரும்படி அழைத்தபொழுது தனது குடும்பப் பாரத்தை உணர்ந்து அவர் இங்கேயே முதலில் அரசாங்க லிகிதர் சேவையில் சேர்ந்து

சென்னை..:

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பலம் உமாமகேஸ்வரன், பிரபாகரன் ஆகியோர் தலைமையிலான இயக்கத்தினரிடையே இடம்பெற்றதாக கூறப்படுகின்றது.

இத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் குறித்து தமிழக பொலிஸார் இதில் ஈடுபட்டவர்களைக் கடுமையாக எச்சரித்துள்ளதாகவும், எதிர்காலத்திலும் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றால் இருதீவிரவாதத் தலைவர்களும் கைதுசெய்யப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

[கி]

பாராளுமன்றத்தில்.....

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்தாபனங்கள் இந்தப்பரீட்சைக்கான விண்ணப்பபடிவங்களைக்கூட அச்சிட்டு வெளியிட்டன அந்த அளவுக்கு இந்தப்பரீட்சைக்கு கிராக்கியிருந்தது.

ஆனந்தி
வீடியோ சினிமா
[மனேகராவில்]
கமலஹாசன், ராதா, ரேவதி நடித்த
பாரதிராஜாவின்
ஒரு கைதியின் டயறி
[கலர்]

MANOHARA
Daily 10-30, 2-5 !, 4-15
Muhammed Ali
in
BODY AND SOUL
(Strictly For Adults)
கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும். பயங்கரச் சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

நீகல் மினி
தினசரி 10-15, 1-30
கமல்-ராதா-ரேவதி நடிக்கும்
பாக்கியராஜ் கதை வசனத்தில்
பாரதிராஜாவின்
ஒரு கைதியின் டயறி

நீகல்
தினசரி 10-30, 2-00
JUNGLE WARRIORS
(Full of Action-Adults)
(குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்)

யாழ். வின்சர் மினி
விஜயகாந்-ஊர்வசி நடித்த
மாமன் மச்சான்
[கலர்]
தினசரி 10-30, 2-15.

WINDSOR
Now Showing
Daily 10-30, 2-00, 4-15
SATURN 3
Kirk Douglas'
Chilling Suspense Thriller
Set in Space

லிடோ சினிமா
10.30 am, 2-00 pm,
4-00 pm
"HAPPY HOKKER GOES HOLLYWOOD"
Adults Only

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-15, 12-15, 2.30
சிவாஜி, கே. ஆர். விஜயா பிரபு நடித்த
நீதிபதி
(கலர்)

யாழ். ஆஸ்பத்திரி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்ததாகவும் இடைவழியில் இனந்தெரியாதநபர்கள் சிலர் காரை மறித்து, அதைத் தரும்படி வற்புறுத்தியபொழுது தமது கடமையைப் பற்றி விரிவாக எடுத்துச்சொல்லிவிட்டுப்புறப்பட்டதாகவும் மீண்டும் பின் தொடர்ந்த அந்த நபர்கள் ஆஸ்பத்திரிக்கு அண்மையில் தடுத்துநிறுத்திவிட்டு கார் சாவியை எடுத்துச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்தநபர்கள் கார் சாவியை எடுத்துச்சென்றபோதிலும் வைத்தியநிபுணர் தமது காரைவிட்டு இறங்காமல் இருந்தாராம். சற்றுநேரத்தில் அதேநபர்கள் அவ்விடத்துக்கு வந்துகார்சாவியைக்கொடுத்துவிட்டு தலைமறைவாகிவிட்டார்களாம்.

வைத்திய நிபுணர் பின்னர் யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்து சத்திரசிகிச்சையை மேற்கொண்டதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது.

(மா)

வகுப்புகளுக்கு செல்லாமலிருப்பர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட மாணவர்களின் பகிஷ்கரிப்புக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து மற்றும் சகலபீடங்களும் நேற்று நண்பகல் 12 மணியுடன்கோரிக்கை நிறைவேறும் வரை வகுப்புகளுக்குச் செல்வதில்லை என்று முடிவு செய்துள்ளனர்.

கடந்த 4ம் திகதி நண்பகல் தொடக்கம் விஞ்ஞான பீட மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருவது தெரிந்ததே.

[மா]

யாழ். நீதிமன்றங்களில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்கள், நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாததினாலும் விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

சட்டத்தரணிகள் சங்கம், எடுத்த முடிவைத் தொடர்ந்து, சட்டத்தரணிகள் நீதிமன்றத்திற்கு சென்று வருகிறார்கள்.

சில வழக்குகளில் வழக்குகளை தாக்கல் செய்த பொலிஸாரும், சாட்சிகளாக உள்ளவர்களும் நீதிமன்றம் வராததினால், வழக்குகள் ஒத்திவைக்கப்படுவதாக, சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

புதிய வழக்குகள் எதுவும் தாக்கல் செய்யப்படுவதில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

[க]

மரணப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் குறித்து யாழ் ஆஸ்பத்திரியில் ஓர் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

கூட்டத்தின் பின்னர் ஊழியர்கள் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளனர். சுகாதார வசதிகளில் ஒரு காலத்தில் சிறந்துவிளங்கிய இம்மாவட்டத்தில், கடந்த சில மாதங்களில் பல காரணங்களைக் காட்டி அத்தியாவசிய சேவைகள் எனக் கருதப்படுகின்ற சுகாதார திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனங்கள் கடத்தப்பட்டுள்ளதால் சுகாதார சேவை நலிவுறத் தொடங்கியுள்ளது.

சுகாதார திணைக்கள ஊழியர்களது தனிப்பட்ட வாகனங்கள் இப்பொழுது கடத்தப்படுவதால் நலிவடைந்த சேவைகள் மேலும் மரணப் பிடிக்குள் தள்ளப்படுகின்றது.

சேவைகள் பலனற்றுப் போவதால் வைத்தியர்களும் மற்றையோரும் விலகிச் செல்வதற்கு இந்நிலை காரணியாக செயல்பட்டு பல வருடங்களாக பலரது அயராத முயற்சியினால் மேன்மையடைந்த சுகாதார சேவைகள் செயலற்று வசதியற்ற பொதுமக்களின் ஆழ்ந்த அனுதாபத்துக்குள்ளாக்குகின்றது.

மனித உரிமைகள்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தீவிரவாதிகளுக்கும் சம்பந்தமில்லையென்று குறிப்பிட்டார்.

இந்தியா உறுதி

இந்த ஆணைக்குழுக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக இந்தியா உறுதியான நிலையைக் கொண்டிருந்தது.

இந்தியப் பிரதிநிதி டாக்டர் ஜி. எஸ். தில்லான் அங்கு தெரிவித்ததாவது: இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக இந்தியா மிகுந்த அவதானத்துடனிருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்பதையே இந்தியா விரும்புகின்றது. ஆனால் இலங்கை அரசாங்கம் இலங்கைத் தமிழர்களுடன் சமரசப் பேச்சுக்களை நடத்த தவறியுள்ளது.

இலங்கை வடபகுதியில் தமிழ் மக்கள் நடத்தப்படும் விதம்குறித்துசுவிற்சர்லாந்தில் ஜெனீவா நகரில் இடம்பெறும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்திலேயே இக்கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

எச். டபிள்யு கருத்து

இந்த ஆணைக்குழு முன்னர் இலங்கை சார்பில் கிரேஷ்ட சட்டத்தரணி எச். டபிள்யு. ஜயவர்த்தனா தமது கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் கூறியதாவது "மனித உரிமைகள் மீது ஆழ்ந்த கரிசனை செலுத்துவோர் வெளி நாடுகளில் பயங்கரவாதிகள், கொலையாளிகள் தஞ்சமடைவதைத் தடுக்கவேண்டும்.

இலங்கை இனப்பிரச்னையைத் தீர்க்கும் விடயத்தில் இந்தியாவின் ஒத்துழைப்பை இலங்கை தொடர்ந்து நாடுகிறது" என்றார். (கி)

'ஜீப்'பை மறித்து எடுத்துச் சென்றனர்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு கச்சேரியை சேர்ந்த சமூகசேவை அதிகாரிகள் வந்தாறுமூலையில் அசம்பாவிதச்சம்பவங்கள் இடம்பெற்ற இடத்திற்குச் சென்று கொண்டிருக்கையில் சந்திவெளி என்ற இடத்தில் வைத்து அவர்கள்சென்ற ஜீப் வண்டி இனந்தெரியாதவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது

மட்டக்களப்பு நீர்ப்பாசன திணைக்களத்துக்குச் சொந்தமான ஜீப் ஒன்று இனந்தெரியாதவர்களால் எடுத்துச் செல்லப் பட்டுள்ளது.

கொம்மாந்துறையில் வைத்து லக்ஸ்பிறே வான் ஒன்று எடுத்துச்செல்லப்பட்டு வேறொரு இடத்தில் ஒரு மரத்துடன் மோதிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதிலிருந்த 18 ஆயிரம் ரூபா பெறுமதியான லக்ஸ்பிறேமா காணப்படவில்லையாம்.

சாக்கு விற்பனை

முத்துஐயன்கட்டு ப நோ. கூ. சங்கத்தின் 2138 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. சாக்குகளைப் பெற விரும்புவோர் மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்துவதுடன் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 10/- செலுத்தி சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பிக்கவேண்டும் சீல்இடப்பட்ட கடித உறையில் இடப்பக்க மேல் மூலையில் வெற்றுச் சாக்குகளுக்கான கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிட்டு தலைவர், முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கம், ஒட்டுசுட்டான் என்ற முகவரிக்கு 27-3-1985ம் திகதி மு.ப. 12-00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல்வேண்டும். சாக்குகளைப் பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்
முத்துஐயன்கட்டு
ப நோ. கூ. சங்கம்,
ஒட்டுசுட்டான்.
11-03-1985

2225

காணி ஆணையாளர் திணைக்களம், கிளிநொச்சி மாவட்டம்
கேள்விப் பத்திரங்கள் கோரல்
மழை நீர் பயிர்ச் செய்கைத் திட்டம்

1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த வேலைகளுக்காக முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்தும் கிளிநொச்சி அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன.

2. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களை கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் (காணி) அவர்களுக்கு 1985- 03- 15 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாய் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது அதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியிற் போடுதல் வேண்டும் கேள்விப் பத்திரத்தை தபாலில் அனுப்புவதாயின் என்வலப்பின் இடதுபக்க மூலையில் குறிப்பிட்ட கட்டிடத்திற்கான கேள்விகள் எனக் குறிப்பிடுதல் வேண்டும். சீல் வைக்கப்பட்ட கேள்விகள் அதே தினத்தில் (15-03-85) காலை 10-15 க்குத் திறக்கப்படும். ஆகவே கேள்விதாரர்கள் இத்தினத்தில் கேள்விகள் திறக்கப்படும் பொழுது பிரசன்னமாய் இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

3. கேள்விப்பத்திரங்கள் கிளிநொச்சி கச்சேரியின் காணிப் பிரிவிலிருந்து 04- 03- 85 தொடக்கம் 15- 03- 85 வரையும் வழங்கப்படும் கேள்விப்பத்திரங்கள் பெறப்படும் பொழுது, மீளளிக்கப்படாத தொகை ரூபா 50-00 யும், மீளளிக்கப்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வைப்புப் பணத்தையும் ஒவ்வொரு வேலைகளுக்கும் தனித்தனியாகச் செலுத்தி அதன் பற்றுச் சீட்டுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்

4. மேலதிக விபரங்களைக் கிளிநொச்சிக் கச்சேரியின் காணிக் கிளையிலிருந்து காரியாலய நேரங்களிற் பெற்றுக் கொள்ளலாம்.

வேலைத்திட்டத்தின் விபரங்கள்

1. ஜெயபுரம் பல்லவராயன்கட்டு

	தொகை	பதிவு செய்யப்பட்ட தொகை ரூபா-சதம்	வைப்புப் பணம் ரூபா-சதம்
1. பாடசாலை அமைத்தல் (மலசலகூடங்கள் உட்பட)	01	250, 000. 00	300/-
2. அரசினர் விடுதி அமைத்தல் தரம் II	03	150, 000. 00	200/-
3. அரசினர் விடுதி அமைத்தல் தரம் III	02	200, 000 00	200/-
4 கூட்டுறவுச் சங்கத்திற்கான கட்டிடம் அமைத்தல் (மலசலகூடம் உட்பட)	01	100, 000. 00	100/-

2. ஆனைவிழுந்தான்குளம் - வன்னேரிக்குளம்

1. பாடசாலை அமைத்தல் (மலசல கூடங்கள் உட்பட)	01	250, 000. 00	300/-
2. அரசினர் விடுதி அமைத்தல் தரம் II	01	150, 000 00	200/-
3. அரசினர் விடுதி அமைத்தல் தரம் III	01	200, 000. 00	200/-
4. கூட்டுறவுச் சங்கத்திற்கான கட்டிடம் அமைத்தல் (மலசல கூடங்கள் உட்பட)	01	100, 000. 00	100/-

ந. ஜெயநாதன்,
அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்டம்.

காணிக் கிளை, கச்சேரி, கிளிநொச்சி.
1985- 02- 28.

2221

பகிரங்க ஏல விற்பனை

1985-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு சங்கானை உப-பணிமனையில் கீழ்காட்டப்படும் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும். கேள்வித் தொகை உடன் செலுத்திப் பொருட்களை அப்புறப்படுத்தப்படவேண்டும்.

1. தேக்கமரங்கள் - ரூபா 1000/- (மேல்)
2. புதினப் பத்திரிகைகள்
3. வெற்று வெள்ளைப்போத்தல்கள்.

க. சிவபாதம்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

யாழ். அபிவிருத்திச் சபை
உப-பணிமனை,
சங்கானை.
8-3-1985

2218

துர்க்காதேவி ஆலய கொள்ளை

தமிழ் இனத்திற்கு தலைக் குனிவை ஏற்படுத்தியது

கருத்தரங்கில் பிரஸ்தாபம்

(மாவிட்டபுரம் நிருபர் எஸ். ஆர். ஞானசுந்தரம்)

"துர்க்கா தேவி ஆலய கொள்ளைச்சம்பவம் தமிழினத்திற்கே தலைகுனிவை ஏற்படுத்திவிட்டது." என தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் இடம் பெற்ற ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஆலய அறங்காவல் குழு உறுப்பினருமான திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

இக்கருத்தரங்குக்கு முன்னர் சைவப் பெரியார்கள் அந்தணர்கள், பக்தர்கள், மகளிர் ஆகியோர் துர்க்காதேவி ஆலய கொள்ளையைக் கண்டிக்கும் சுலோக அட்டைகளைத் தாங்கி சிவபுராணம் ஓதியவாறு ஆலய வீதியைச் சுற்றி பிரார்த்தனை ஊர்வலமொன்றை நடத்தி கருத்தரங்கு மண்டபத்திற்கு வந்தடைந்தனர்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு. தர்மலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஆலயத்தில் இடம்பெற்ற சம்பவங்களும், தொண்டர்களை நிந்தனை செய்தமையும் மன்னிக்க முடியாத சம்பவங்களாகும். அநாகரிகமாக நடக்கிறோம் என்பதைக் கூட கொள்ளையர்கள் சிந்திக்கவில்லை அவர்கள் ஆலயம் எதற்கு? மண்டபங்கள் எதற்கு? என்று ஏளனமும் செய்துள்ளார்கள்

சோவியத் நாட்டில் கம்யூனிச ஆட்சிநிலவுகின்றபோதும் ஆலயங்களைப் பாதுகாக்க அங்கு பெருமளவில் செலவு செய்யப்படுகிறது. புரட்சியின் போது கூட ஆலயங்களைத் தீண்டவில்லை. யுத்த காலத்தில் சேதமுற்ற ஆலயங்களை சோவியத் ஆட்சியினர் பல கோடி ரூபா செலவில் புனரமைத்தனர். கம்யூனிச ஆட்சியில் கூட ஆலயங்கள் பேணப்படும்போது நமது மத்தியில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது கவலைக்குரியது.

மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக குருக்கள் பேசுகையில் எமது சமயத்திற்கோ, கலாச்சாரங்களுக்கோ ஒவ்வாத செயல்கள் கூட இன்று தலைகாட்டுகின்றன. இவற்றை யார் செய்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். சமய பெரியார்கள், சமய ஸ்தாபனங்கள், ஆலய நிர்வாகிகள் ஆகிய சகலரும் இணைந்து இச்சம்பவங்களுக்கு எதிராக தீர்க்கமான முடிவுகள் எடுத்துச் செயல்பட வேண்டும்' என்றார்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா பேசுகையில் எத்தகைய இன்னல் வந்தாலும் தமிழினத்தின் தனித்துவத்தை பாதுகாக்க எமது கலை, கலாச்சாரம் பண்பாடுகளை பாதுகாக்க வேண்டும் என்றார். எமது விடிவுக்காக போராடும் போது எமது சொத்துக்களான ஆலயங்கள், தொழில் ஸ்தலங்கள் கல்விக் கூடங்கள் ஆகியவற்றை நாம் பாதுகாக்க வேண்டும் என்றார்.

அறியாமை

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையுரையில் கூறியதாவது:

எமக்கு ஏற்படும் இன்னல்களுக்கு தீர்வுகாண நாம் பிரார்த்தனைசெய்வதே ஒரே வழியாகும், கொள்ளைச் சம்பவத்தால் ஏற்பட்ட துயர் தீர பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளோம். இனிமேல் இப்படியான சம்பவம் இடம் பெறக்கூடாதென்பதே எமது முதல் பிரார்த்தனையாகும். வழிபாட்டு ஸ்தலத்தில் ஆயுதங்கள், துப்பாக்கிகள் சகிதம் நுழைந்து நிந்தனைசெய்தமை அறியாமையால் ஏற்பட்ட சம்பவமே என்றார்.

மற்றும் நல்லை ஆதீனமுதல்வர். சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் யாழ். பல்கலைக்கழக நூகர் திரு. சிவராசா, திரு. ஏழூர்நாயகம், திருமதி வசந்தா வைத்திய நாதன் உட்பட பலர் உரையாற்றினர்.

சோஷலிச...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வயது 73 ஆகும்.

சைபீரிய உழவர் குடும்பத்தில் 1911ம் ஆண்டு செப்டெம்பர் 24ம் திகதி சேர்நென்கோ பிறந்தார். 1930ம் ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து இவர் தமது பொதுவாழ்வை ஆரம்பித்தார்.

தொழிலாளவர்க்கத்தின் நலனில் பெரும் ஈடுபாடு கொண்டவராக இவர் விளங்கினார். இதன்காரணமாக சோவியத்தின் உயர்விருதுகளில் ஒன்றான 'சோஷலிஸத் தொழிலாளரின் வீரர்' என்ற விருதை இவர் இருதடவைகள் பெற்றிருந்தார்.

திரு சேர்நென்கோவின் இறுதிச்சடங்குகள் நாளை புதன்கிழமை மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது [து]

உலகத் தலைவர்கள் அனுதாபம்

[கொழும்பு]

சோவியத் அதிபர் திரு கெர்னன்கோவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவும், பிரதமர் திரு ஆர். பிரேமதாஸவும் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர்

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ்காந்தியும் தனது அனுதாபச் செய்தியை அனுப்பி வைத்துள்ளார். மரணச்சடங்கில் கலந்துகொள்ள அவர் மாஸ்கோ செல்லவிருக்கிறார். அத்துடன் சோவியத் அதிபரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்து முகமாக இந்தியாவில் இன்று தொடக்கம் 3 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொண்டாவுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தின் அல்லது தொண்டமானின் விருப்பங்களுக்கேற்ற வகையில் தீர்க்க முடியாது.

திரு தொண்டமான் அரசாங்கத்தில் மிகவும் சக்தி மிக்கவராய் இருக்கிறார் அவருக்கெதிராக ஆட்சியிலுள்ளவர்கள் வாய்திறக்கப் பயப்படுகிறாகள். 'ஜனாதிபதிகூட சிறுபான்மையினரின் செல்வாக்கிற்கு கட்டுப்பட்டுள்ளது வியப்பைத் தருகிறது.

"இனப்பிரச்னை முன்பு ஒரு போதுமில்லாதவாறு விரிவடைந்துள்ளது இதனை வன்முறைகளின்றியே தீர்க்கவேண்டும்" என்றார். (கி)

பூஸா முகாமில் ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து வசதியின்மை போன்ற காரணங்களால் திரும்பவும் பூஸாவுக்கு அவர்கள் கொண்டுசெல்லப்பட்டதுதெரிந்ததே. (மா)

துர்க்காதேவி ஆலயகொள்ளை ஈ.பி.ஆர் எல்.எவ். கண்டனம்

(யாழ்ப்பாணம்)

இன்று ஈழத்தில் நிகழும் சில சம்பவங்கள் எம்மைப் பலவீனப்படுத்தும் வகையிலேயே நடந்துகொண்டிருக்கின்றன. இவை சில விடுதலை இயக்கங்களின் விடுதலைப் போராட்டம் பற்றிய தவறான புரிதலினாலும் அதேவேளை இன்றைய சூழ்நிலையைப் பயன்படுத்தித் தம்முடைய சுயநல நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முயன்று வரும் சில கொள்ளைக் கூட்டத்தினரின் செயற்பாடுகள் ஓங்கி வருவதாலும் நிகழ்கின்றன. எனவே இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு சகல விடுதலை இயக்கங்களும் தமது பங்களிப்பை வழங்கவேண்டும்.

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்) விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது. அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

அண்மைக்காலங்களில் தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், பொதுமக்களின் வீடுகள், கூட்டுவுறவுச் சங்கங்கள், வைத்தியசாலைகள், நகைக்கடைகள், பலசரக்குக் கடைகள், கோயில்கள் ஆகியவற்றில் இடம்பெற்ற கொள்ளைகளுக்கும் எமக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்பதை மக்களுக்கு உறுதிப்படுத்த விரும்புகின்றோம். இவை (தணிக்கை) அதே சமயம் எமது ஸ்தாபனத்திற்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் எம்மைப்பற்றிய தவறான பிரச்சாரத்தை சிலர் மேற்கொள்வதாக அறிகின்றோம், எமது பெயரைச்சொல்லி யாராவது கொள்ளையில் ஈடுபட்டால் அவரைக் கையும் மெய்யுமாகவோ, இல்லையேல் தகுந்த ஆதாரங்களுடனோ எங்களிடம் அவர்களை ஒப்படைத்தால் அவர்களை மக்கள் மத்தியில் (தணிக்கை) தெல்லிப்பளை துர்க்காதேவி அம்மன் கோயிலில் அண்மையில் நடந்த மோசமான கொள்ளையை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதோடு இவை ஏதாவது ஒரு இயக்கத்தால் நடாத்தப்பட்டிருப்பின் இவர்கள் மக்களின் கலாசார உணர்வுகளை நிராகரித்துக் கண்மூடித்தனமான முறையில் செயற்படுகின்றார்கள் என்றே நாம் கருதுகின்றோம். மக்களின் விடுதலை மீதான நம்பிக்கையை வளர்ப்பதற்குப் பதில் அவர்களை விரக்திக்கு இட்டுச் செல்லவே இது வழி வகுக்கும். அத்துடன் இக்கொள்ளைக்குக் காரணமாக ஏதாவது ஒரு இயககமோ அல்லது கொள்ளைக் கூட்டமோ காரணமாய் இருந்தாலும் அவர்களைக் கண்டு பிடித்து மக்கள் முன் நிறுத்த எமது ஸ்தாபனம் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

ஆசிரியர் இடமாற்றம் த. ஆ. சங்கம் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

தமிழ் ஆசிரியர் இடமாற்றத்தில் பெரும்பகுதி இம்மாதம் 15ம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதையிட்டு இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் மகிழ்ச்சியடையும் அதேவேளையில் இவ்விட மாற்றங்களில் தாமதம் ஏற்படும் என கூறி லஞ்சம்வாங்க முயற்சிக்கும் சக்திகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது என சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

'ரெலோ' அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியில் கடந்த 6-ம் திகதி ஆயுதப்படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான கு. பாலகுமார் (ரஞ்சன்) (வயது 21), த. சிறீதர் (20 வயது) ஆகிய இருவருக்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) தமது தோழர்கள் என உரிமை பாராட்டி அஞ்சலி செலுத்தி துண்டுப் பிரசுரம் ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

'ரெலோ' இயக்கத்தின் அரசியற்பிரிவால் வெளியிடப்பட்டுள்ள அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"தோழர் சிறீதர் சிலகாலமாகவே எமது ஸ்தாபனத்தில் இணைந்திருந்தாலும் இவர் கண்ட கனவுகளோ ஏராளம்! ஒடுக்கு முறைகளை துல்லியமான முறையில் இனம் கண்டு கொண்டதன் காரணமாக தமிழ் மக்களின் நலன்களை முதன்மைப் படுத்தியவர் என்பது குறிப்பிடத் தக்கது.

"தோழர் பாலகுமார் நீண்ட காலமாகவே ஸ்தாபனத்துடன் இணைந்து செயலாற்றியவர் ஆனாலும் இடைக்காலத்தில் சீரற்ற அரசியல் நெருக்கடிகளின், தாக்கங்களின் காரணமாக எம்மை விட்டகன்ற சிலருள் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது. அரசியல் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துப் போராட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துகொண்ட தோழர் மீண்டும் எமது ஸ்தாபனத்துடன் இணைந்தே செயல்பட்டுள்ளார். (மா)

வடபிரதேச தொழிற்சங்க கூட்டுக்குழு முடிவு

(யாழ்ப்பாணம்)

வடபிரதேசத் தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு நேற்றுக் காலை யாழ். நகரிலுள்ள லங்கா தொழிற்சங்கங்களின் அலுவலகத்தில் திரு. எஸ். விஜயானந்தன் தலைமையில்கூடி கூட்டுக்குழுவின் நடவடிக்கைபற்றி இறுதி முடிவு எடுத்தது. (க)

கிளிநொச்சி பஸ்சேவை: டீசல் தட்டுப்பாட்டால் மட்டுப்படுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

டீசல் தட்டுப்பாட்டால் வ. பி. போக்குவரத்துச் சேவை நேற்று மட்டுப்படுத்தப்பட்டு நடத்தப்பட்டதாம்.

இன்று போதியளவு டீசல் கிடைத்தால்தான் பூரணமான பஸ்சேவை நடைபெறுமென்று சபை உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இக்கட்டுப்பாடு நேற்று கிளிநொச்சிக்கு ரயிலுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து செல்லவிருந்த பஸ்சேவை மட்டுப்படுத்தப்பட்டதால் சில பிரயாணிகள் செல்லமுடியாமலிருந்ததாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)

யாழ்ப்பாணம் பதில் நீதவான்

(யாழ்ப்பாணம்)

யாழ் நீதவான் எஸ். நாகராசா லீவில் சென்றுள்ளதால் சிரேஷ்ட சட்டத்தரணி கே. வி எஸ். சண்முகநாதன், நேற்று யாழ். பதில்நீதவானாக கடமையாற்றினார். இவர் இன்றும்நாளையும் தொடர்ந்து பதில்நீதவானாககடமையாற்றுவார். (க)

மரண அறிவித்தல்

செல்வி தையல்நாயகி காராளபிள்ளை

தையல்நாயகி - காராளபிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி காராளபிள்ளை ஆகியோரின் மூத்த புதல்வியும், திருமதி மங்கையற்கரசி ஆனந்தீஸ்வரன், முத்துவேலு, திருத்தணிகாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 12-3-85 செவ்வாய் காலை 8 மணியளவில் ஆனைக்கோட்டைச் சந்தியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை சரையான்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 2240

மரண அறிவித்தல்

முத்துத்தம்பி அருணாசலம்

உரும்பராய் தெற்கைச் சேர்ந்த பிரபல சுருட்டு தொழில் அதிபரும், வர்த்தகருமான முத்துத்தம்பி அருணாசலம் காலமாகிவிட்டார் இவர் முத்துத்தம்பி தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், மலர்மணி, யோகம்மா, புவனேஸ்வரி ஆகியோரின அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நீர்கொழும்பு நடராசா, காங்கேசு (பெருந்தெருக்கள் திணைககளம் மனனார்), சபாநாதன் (கணசகாளர் மன்னார் கச்சேரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-3-85 இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உரும்பராய் வெம்பன் மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 2238

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம ஆண்டு மார்ச மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka unde Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126